முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.

**GWOP No. 61/2024**

**நாள்.12.11.2025**

ம.சா.1 திரு.சுலைமான் மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் 9ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் வேறொரு மதத்தில் இருந்து, முஸ்லீம் ஆக மதம் மாறியுள்ளேன் என்றால் சரிதான். எனது தாயார், என் தந்தை மற்றும் என் குடும்பத்தினர் யாரும் மதம் மாறவில்லை என்றால் சரிதான். நான் மதம் மாறி வந்துதான் எதிர்மனுதாரரின் மகளை திருமணம் செய்து கொண்டேன் என்றால் சரிதான். திருமண சமயத்தில் நான் கூலி வேலை பார்த்து வந்தேன். நான் குழந்தைகள் பிறந்த பிறகுதான் வெளிநாட்டிற்கு வேலைக்கு சென்றேன். நான் எத்தனை ஆண்டுகள் வெளிநாட்டில் இருந்தேன் என்றால் ஒரு ஆண்டுதான் வேலை பார்த்தேன். அதற்கு பின் நான் வெளிநாட்டிற்கு செல்லவில்லை.

திருமணத்திற்கு பின் நானும் எதிர்மனுதாரரின் மகளும் இராமநாதபுரத்தில் தனிக்குடித்தனம் இருந்தோம் என்றால் சரிதான். அப்போது எதிர்மனுதாரர் எங்கள் வீட்டிற்கு வந்து, குழந்தைகள் பார்த்து பராமரித்து வந்தார் என்றால் சரிதான். அவர் அப்போது பொருள் கொடுத்து உதவிகள் செய்து வந்தார் என்றால் சரிதான். நான் வெளிநாட்டிற்கு சென்ற சமயத்தில் எதிர்மனுதாரரின் மகளான எனது மனைவியை எனது சொந்த ஊரான சீனங்குடியில் எனது பெற்றோர் வீட்டில் இருக்க சொன்னேன் என்றால் சரியல்ல.

நான் வெளிநாட்டில் இருந்து பணத்தை என் மனைவிக்கு அனுப்பினேன். அவ்வாறு பணம் அனுப்பியதற்கு ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. நான் அதிகபட்சம்



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.11.12 18:16:57 +0530

ரூ.30,000/- ஒரு மாதத்திற்கு அனுப்பியுள்ளேன். அதற்கான ஆவணங்கள் என் வசம் உள்ளது என்றால் சரிதான்.

நான் வெளிநாட்டிற்கு சென்றபோது எனது மனைவி, பிள்ளைகளை சீனங்குடியில் வைத்திருந்தபோது, எந்தவிதமான பணத்தையும் என் மனைவி மற்றும் பிள்ளைகளுக்காக அனுப்பவில்லை என்றாலும், பணத்தை எனது பெற்றோருக்குத்தான் அனுப்பினேன் என்றாலும் சரியல்ல. சீனங்குடியில் எனது மனைவியை எனது பெற்றோர் 2 லட்சம் பணம் மற்றும் நகைகளை கொண்டுவரச்சொல்லி கொடுமைப்படுத்தினார்கள் என்றால் சரியல்ல. அதனால் என் மனைவியை அவர்கள் வீட்டைவிட்டு விரட்டிவிட்டார்கள் என்றால் சரியல்ல.

என் மனைவி என்னுடன் வாழ்வதற்கு வீட்டிற்கு வருவதாக சொன்னதாகவும், நானும் பணம் மற்றும் நகைகளுடன் வந்தால்தான் சேர்த்துக்கொள்ளமுடியும் என்று என் மனைவியை அசிங்கமான வார்த்தைகளால் திட்டினேன் என்றால் சரியல்ல. அதனால் ஏற்பட்ட மன உளைச்சல் காரணமாக என் மனைவி தற்கொலை செய்து கொண்டார் என்றால் சரியல்ல. என் மனைவி தற்கொலை செய்து கொண்டதால், என் மீதும் என் குடும்பத்தார் மீதும் எதிர்மனுதாரரின் மகன் புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் நான் வெளிநாட்டில் இருந்ததால் எனக்கு தகவல் எதுவும் தெரியாது. என் மீதும் என் குடும்பத்தார் மீதும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த விவரம் எனக்குத் தெரியும் என்றும், வழக்கிற்காக நான் அதை மறைக்கிறேன் என்றால் சரியல்ல.

நான் தற்போது ஏர்வாடியை சேர்ந்த ஒரு பெண்ணை, திருப்பாலைக்குடியை சேர்ந்த தஸ்லிமா என்பவர் மூலம் இரண்டாவது திருமணம் செய்து கொண்டேன் என்றால் சரியல்ல. நான் தற்போது தேவிப்பட்டிணத்தில் டீ மாஸ்டராக வேலை செய்கிறேன். எனக்கு தற்போது மாதம் 40,000 ரூ வருமானம்



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.11.12 18:16:59 +0530

இருக்கிறது. நான் என் குழந்தைகளுக்கு ஏதேனும் செலவு செய்துள்ளேனா என்றால் பள்ளிக்கட்டணம் செலுத்தியுள்ளேன். ம.சா.ஆ.6 பள்ளி கட்டண ரசீதுகள் இந்த வழக்கிற்கான நான் வலுக்கட்டாயமாக செலுத்தி பெறப்பட்ட ரசீதுகள் என்றால் சரியல்ல. என் மூத்த பையனுக்கு Appendix அறுவை சிகிச்சை செய்துள்ள விவரம் எனக்குத் தெரியுமா என்றால் எனக்கு தெரியப்படுத்தப் படவில்லை. இந்த விவரம் எனக்குத் தெரியும் என்றும், மருத்துவ செலவு எதிர்மனுதாரர்தான் செய்தார் என்றும், நான் என் குழந்தைகளுக்காக எந்த செலவும் செய்ததில்லை என்று சொல்வது சரியல்ல.

எனக்கு குடிப்பழக்கம் உள்ளதா என்றால் இல்லை. எனக்கு குடிப்பழக்கம் உள்ளது என்றும், நான் என் மனைவி மற்றும் குழந்தைகளுடன் வாழ்ந்து வந்த சமயம் நான் குடித்துவிட்டு வந்து, என் மனைவியையும், குழந்தைகளையும் கொடுமைப்படுத்துவேன் என்றால் சரியல்ல.

எதிர்மனுதாரருக்கும், என் மனைவிக்கும் தகராறு நடந்த விவரம் எனக்கு எப்படி தெரியும் என்றால் என் பக்கத்துவீட்டுக்காரர் மூலம் தெரியவந்தது. அவரது பெயர் எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. நான் கூறுவதுபோல் எதிர்மனுதாரருக்கும், என் மனைவிக்கும் எந்த காலத்திலும் தகராறு ஏற்பட்டதில்லை என்றும், நாங்கள் விரட்டிவிட்ட பின்பு என்மனைவி மற்றும் குழந்தைகளை எதிர்மனுதாரர்தான் பார்த்து பராமரித்து வந்தார் என்று சொல்வதும் சரியல்ல.

எனது இரண்டு குழந்தைகளும் தற்போது எதிர்மனுதாரருடன் மகிழ்ச்சியாகவும், பாதுகாப்பாகவும் உள்ளனர் என்றால் சரியல்ல. நான் குழந்தைகளை பார்க்காமல் மன உளைச்சலில் இருப்பதாக வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது மனு மற்றும் நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலம் ஆகியவற்றில் கூறியுள்ள விவரங்கள் அனைத்தும் பொய்யானவை என்றால் சரியல்ல. நான் ஏற்கனவே குழந்தைகளை



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.11.12 18:17:02 +0530

கொடுமைப்படுத்தியதால், அவர்களின் பாதுகாவலராக நியமிக்க அருகதை இல்லலாதவன் என்றால் சரியல்ல.

எதிர்மனுதாரருக்கு ஒரு மகன் உள்ளார். அவர் வேலை பார்க்கிறார் என்றால் அந்த விவரம் எனக்குத் தெரியாது. இதுநாள் வரை எதிர்மனுதாரர் குழந்தைகளுக்கு ஜீவனாம்சம் கேட்டு என் மீது வழக்கு போடவில்லை என்றால் சரிதான்.

என்னை போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஜெராக்ஸ் நகல் ஆவணத்தில் உள்ள கையெழுத்தோ, கையொப்பமோ என் மனைவியுடையது அல்ல. 2ம் பக்கத்தில் உள்ள சில வாசகங்கள் மட்டும் என் மனைவி கையெழுத்தில் உள்ளன. என் மனைவி இறக்கும்போது, குழந்தைகளை எதிர்மனுதாரரிடம் ஒப்படைத்து, வேறு யாரிடமும் ஒப்படைக்கக்கூடாது என்று சொல்லிவிட்டு இறந்தார் என்றால் சரியல்ல. வழக்றிக்காக அதை மறுக்கிறேன் என்றால் சரியல்ல.

எனது வருமானத்தை காட்ட ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு எந்த வருமானமும் இல்லை என்றாலும், எனக்கு குடிப்பழக்கம் மற்றும் வேறு பழக்கங்கள் உள்ளன என்றும், குழந்தைகளை பாதுகாப்பாக வளர்ப்பதற்கோ, பராமரிப்பதற்கோ எனக்கு போதிய வருமானம் இல்லை என்றும் சொல்வது சரியல்ல. குழந்தைகள் என்னிடம் பாதுகாப்பாக வளர்வதற்கான சூழ்நிலை இல்லை என்றாலும், நான் அவர்களின் பாதுகாவலராக செயல்பட தகுதியற்றவன் என்று சொல்வது சரியல்ல. மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை.

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.11.12 18:17:06 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம் .